# பொதுக்காலம் 25ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

நமக்கு இறைவன் கொடுத்த வாழ்வை பிறரோடு ஒப்பிடாமல் தன்னிறைவுடன் வாழ இன்றைய பொதுக்காலம் 25ஆம் ஞாயிறு திருப்பலிக்கு அன்புடனே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணியைத் தந்து ஆசீர்வதித்து இருக்கிறார். பணியை இறை திருவுளத்திற்கு பயந்து செய்யும் பொழுது அதற்கான கூலியை இறை கரத்திலிருந்து பெற்றுக் கொள்கிறோம். பிறரின் வளமையில் பொறாமை கொள்ளாமல் இறை ஆசியில் நிறைவடைவோம்.

இன்றைய முதல் வாசகத்தில், தீயவர்கள் தம் எண்ணங்களை விட்டுவிட்டு ஆண்டவரிடம் திரும்பும்போது இறைவன் மன்னித்து இரக்கம் காட்டுவார் என்பதை எசாயா நூலின் வார்த்தைகள் எடுத்துரைக்கின்றன. இவ்வுலக வாழ்க்கையில் ஆசைகளும் அவசரங்களும் நம்மை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லலாம். தவறுக்காக மனம் வருந்தும் போது இறைவன் மன்னித்து இரக்கம் காட்டவே ஆவலாய் இருக்கிறார்.

இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு, “நீங்களும் என் திராட்சை தோட்டத்துக்கு போங்கள், நேர்மையான கூலியைக் கொடுப்பேன்” என்று உவமைகள் வாயிலாக வாழ்வின் உண்மையைக் கற்பிக்கிறார் இயேசு. இவ்வுலகமே திராட்சைத் தோட்டம். நமது வாழ்வே இறைவன் தந்த பணி. நமது வாழ்வை இன்பமாகவும் நேர்மையுடனும் மேற்கொள்வோம்.

பணியை இன்பமாய் செய்யும்போது
வேலை இலேசானதாகிறது.
பணியை நேர்மையாய் செய்யும் போது
மனது இலேசானதாகிறது.

நமது பணியும், வாழ்வும் இறைவனது பார்வையில் சரியானதாக அமையவும், அதற்கான பாதையில் நடைபோட்டு, வெற்றி பெறவும் இப்பலியில் மன்றாடுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. விண்ணகத் தந்தையே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இறைப்பணியை இனிமையுடனும் நேர்மையுடனும் ஆற்றவும், மக்களை நேர்மையான பாதைக்கு அழைத்துச் செல்லவும், வாழ்வின் நற்காரியங்களால் தூய வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்லவனாய் வாழ அழைப்பவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள் தமது பணிகளை உணர்ந்து நேர்மையுடனும், மக்கள் நல்வாழ்வுக்காக உண்மையுடனும் உழைத்து, நாட்டின் வளத்தை அழிக்காமல், ஆக்கப்பூர்வமான திட்டங்களைச் செயல்படுத்த நல்லறிவு தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. "முதன்மையானோர் கடைசியாவர், கடைசியானோர் முதன்மையாவர்" என்றவரே எம் இறைவா!

பணியில் நிறைவில்லாமலும், நிலையான பணியில்லாமலும் வாழ்வில் போராடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் வாழ்வில் நம்பிக்கையை அதிகரித்து, புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, சிறந்த முன்மாதிரிகளாக செயல்பட ஞானம் தர வேண்டுமென்று இறைவா உம்மை நோக்கி மன்றாடுகிறோம்.

4. வெற்றி வீரராய் இவ்வுலகை வென்றவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய இயற்கைச் சூழல் அமைந்து வேளாண் தொழில்கள் சிறந்து பொருளாதார முன்னேற்றம் அடையவும், கொரோனா தொற்றினால் நிலைகுலைந்து உடல் நலமும், பொருளாதார வளமும் சீராகவும், குடும்ப அமைதி, மகிழ்வு பெருகவும், உள்ளத்தின் வேண்டுதல்கள் இறைவன் அருளால் நிறைவேறவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com